நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



பேரருள்செய் சதாசிவம்போல் ஐந்துமுகம் பெற்ருய்
பெயராலே காயத்ரி மந்திரமாய் நின்ருய்
சீர்வளரும் அடிதொழுதோம் காயத்ரி தேவி!
செறிந்திருக்கும் இருள்மாற்றி ஒளிகொடுக்க வாராய்

ஏப்ரல் 1992

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 3

பிரஜோத்
பத்தி

பங்குனி

ஏப்ரல்
1992

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அடியோமைத் தாங்கியோ ? ஆடை உடுத்தோ ?
குடியோம்ப மாநிதியங் கொண்டோ ? — பொடியாரு
நெற்றியூர் வாளரவ நீள்சடையாய் ! நின்றனை
ஒற்றியூர் ஆக்கிற்று உரை.

— கபிலதேவ நாயனார் (பதினோராம் திருமுறை)

அலுவலகம் :
20, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00

கோவிலூர் சுவாமிகளின் ஆசியுரை!

நம்மை நாமே புரிந்து கொள்வதற்காக நம் முன்னோர்கள் உயிர்க் கலையை கோவில்களில் வடித்து வைத்துள்ளார்கள். அக் கலை நாட்டியக் கலை ஆகும். நாம் அக்கலைகளை எல்லாம் நன்கு புரிந்து கொண்டு உத்தமமான செயல்களில் ஈடுபட்டு இலட்சிய வாழ்வு வாழவேண்டும். மனித சரீர தர்மத்தை மாற்றி, உயிர் தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டும் தெய்வீக வாழ்வு நெறிகள் நிறைந்த இடம் தான் கோவில் ஆகும். மனிதப் பிறவி புனிதமானது. அதன்மூலம் தான் அவதாரங்கள் தோன்றியுள்ளது; தோன்றமுடியும் என்பதை நாம் உணர வேண்டும்.

இந்த உலகத்தில் மாறாமல் இருப்பது ஆதார சக்தியாகிய கடவுள் உணர்வு ஒன்றுதான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நல்லது, கெட்டது இரண்டிற்கும் நம் எண்ணங்களே காரணம். எண்ணங்களை மாற்றியமைப்பதற்கு நாம் முயற்சிசெய்ய வேண்டும். அந்த முயற்சியானது சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்ற வழியே செல்வதாக இருக்க வேண்டும். பயிற்சிக் கூடங்கள் விஞ்ஞான ரீதியான எந்தப் படிப்புக்கும் தேவை என்பது தெரிந்த விஷயம்தான். ஆன்மீகப் பயிற்சி என்பதும் இதிலிருந்து விதிவிலக்கு அல்ல. மனித எண்ணங்களை மாற்றயமைப்பதற்கு மகான்களால், சாஸ்திரங்களால் சொல்லப்பட்ட மிகமிகப் பயன் தரக்கூடிய பயிற்சிக் கூடங்கள் தான் கோவில்கள். மனதை ஒருநிலைப்படுத்த நாம் செய்யும் அனைத்து முயற்சிகளுக்கும் கோவில்கள் மிகமிகப் பயன் உள்ளதாக இருக்கின்றன.

தாய்வீடு என்பது மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும் மிகமிக அமைதியைக் கொடுக்கும் இடமாகும். குழந்தை, தந்தையை விடத் தாயிடம் பயமில்லாமல் பழகுகிறது. இதற்கு அடிப்படை, குழந்தை செய்யும் எதையும் தாங்கிக் கொள்ளும் இதயமும், எந்த நிலையிலும் அன்பு பரிமாறும் இயற்கை



குணமும், எந்தக் குற்றத்தையும் மன்னித்து அரவணைக்கும் சுபாவமும் தாய் கொண்டிருப்பதால் தான்.

தாய் வடிவில் கடவுளை வழிபடுகின்ற பக்தனுக்கு மிக எளிதில் வேண்டியதைக் கொடுகின்றாள் அவள். தாய்க்கென்றே அமைக்கப்பட்ட கோவில்தான் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில். தனது குழந்தைகளுக்காக எத்தனையோ வடிவங்கள் எடுத்து ஆட்சி செய்கிறாள் அவள். தமது



காரைக்குடி கண்ணதாசன் விழாவில் பெரு மகிழ்ச்சிக்கிடையே கண்ணதாசன் நற்பணி மன்ற மாநிலத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியாரும் மாநிலப் பொதுச் செயலாளர் திரு. அரு. நாகப்பனும்.

மனதைக் கோவிலாக மாற்றுவதற்கு புறக்கோவில்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தாயுள்ளம் கொண்ட எந்த மனதும் மதுரை மீனாட்சி அம்மனின் திருக்கோவிலே.

எம்மை ஆட்கொண்ட கொற்றவாளீஸ்வரர் திருநெல்லைத் தாயின் திருவருளால் அனைவரது உள்ளங்களும் தாயன்பு நிறைந்த கோவில்களாகத் திகழ்ந்து, மன நலனும், பொருள் நலனும், சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து வர வாழ்த்துகிறேன்.

(கோவிலூரில் 14-3-92 அன்று நடைபெற்ற சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகள் ஆற்றிய ஆசியுரை.)

உனக்கு எந்த வாசனை பிடிக்கும்?


"உனக்கு மல்லிகை வாசனை பிடிக்குமா, பிச்சி வாசனை பிடிக்குமா?" என ஒரு பருவப் பெண்ணைப் பார்த்துக் கேட்டார்கள்.

அதற்கு அவள் "எனக்கு எதிர்வீட்டு சீனிவாசனைத்தான் பிடிக்கும்" என்றாள்.

(காரைக்குடியில் 22-2-92 அன்று நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் பேராசிரியர் திரு. பாஸ்கர பாண்டியன் கூறியது.)

எல். சுந்தரத்திற்குப் பொன்னாடை!

காரைக்குடியில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி (23-2-92) முடிவில் பத்திரிகையாளர் என்ற முறையில் நமது இதழின் துணை ஆசிரியர் திரு.எல். சுந்தரத்திற்கு, காரைக்குடி குற்றவியல் நடுவர் மன்ற நீதிபதி திரு. எம். மாரியப்பன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.



பாகனேரி திரு. கா. சுப. சு. கதி. கா. கணபதி செட்டியார் புதல்வன் செல்வன் காளையப்பன் என்ற செல்வகுமாருக்கும் ஒக்கூர் திரு. சிக. கரு. கண. கரு. சபாபதி செட்டியார் புதல்வி செல்வி மீனாட்சி என்ற வள்ளியம்மைக்கும் 15-3-92 அன்று ஒக்கூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தில் தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர்கள் திரையரங்க உரிமையாளர்கள், திரைப்பட விநியோகஸ்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ரகுபதி என்றும் வாழ்க!

வி. என். சிதம்பரம்

ஆசிரியர் ''நகரத்தார் குரல்''

உலகத்திலேயே சிறந்த அறிவாளிகளும், வியாபாரிகளும் யூத மதத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்வார்கள். யூதர்களுக்கு இணையான ஒரு இனம் இந்தியாவில் தமிழகத்தில் இருக்கிற நாட்டுக்கோட்டை நகரத்தார் இனம் என்று அமெரிக்கர் ஒருவர் ஆராய்ச்சி செய்து புத்தகம் எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட சிறப்புப் பெற்ற இனம் நமது இனம். நமது இனத்தின் மக்கள் தொகை சுமார் ஒரு இலட்சம். அதில் குழந்தைகள், திருமணமாகாதவர்கள் ஆகியோரைக் கழித்து விட்டுப் பார்த்தால் அறுபதாயிரம் பேர்கள்தான் இருக்கிறோம். இந்த அறுபதாயிரத்தில் பர்மா, மலேசியா, சிங்கப்பூர், செய்கோன், இலங்கை, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா முதலிய நாடுகளில் நாம் ஒரு பகுதியினர் வியாபாரம் செய்து வருகிறோம். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு வியாபாரத்திற்கு வேண்டிய கல்வியை மட்டும் கற்று, குறிப்பாக வட்டித் தொழில் மட்டும் செய்து வந்தோம். இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு நமது இனத்தில் ஆண், பெண் இருபாலரும் அதிகம் படித்துப் பட்டம் பெற்றனர். அனைத்துத் தொழில்களிலும் ஈடுபட்டனர். அரசியலிலும் அடியெடுத்து வைக்கத் தொடங்கினோம். சுதந்திரத்திற்குப் பிறகு ஒவ்வொரு சட்ட மன்றத் தேர்தலிலும் நம்மவர்களில் இரண்டு, மூன்று பேராவது சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1971 ஆம் ஆண்டு தேர்தல் வந்தபோது குறிப்பிட்ட ஒரு கட்சி வெற்றி பெறும் நிலையில் இருந்த நேரத்தில், அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட நம்மவர்களில்



இரண்டு, மூன்று பேர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. அந்த நேரத்தில் அந்த கட்சியின் முக்கியத் தலைவர்களை நானும் நம்மவர்களில் சிலரும் சென்று பார்த்து ''எங்கள் சமூகத்திற்கு அமைச்சரவையில் ஒரு இடமாவது தாருங்கள்'' என்று பணிவாகக் கேட்டுக் கொண்டோம். அதற்கு அவர்கள், ''சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட இரண்டு, மூன்று

இடம் கொடுத்ததே நாங்கள் உங்கள் மீது கொண்டிருக்கும் அன்பினுல்தான். ஆகவே... அமைச்சர் பதவியை மட்டும் மறந்து விட்டு வாருங்கள்'' என்று சொன்னார்கள். திறமை இருந்தும் நம்மவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இது நமது நிலை. காரணம், நம்மவர்கள் வன்முறையில் ஈடுபடுவதும் இல்லை; 'அதைச் செய்வோம் இதைச் செய்வோம்' என்று எந்த அரசையும் மிரட்டுவதும் இல்லை; நாம் எண்ணிக்கையில் சிறுபான்மை இனத்தவரும் கூட.

இந்த நிலையில் இந்தியா சுதந்திரம் பெற்ற 45 ஆண்டுகளுக்குப் பிறகு நமது இனத்தில் முதல் முறையாகத் தமிழக அமைச்சரவையில் திரு. எஸ். ரகுபதி அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். எட்டாக் கனியாக இருந்த ஒன்று, நம் இனத்திற்குக் கிடைத்ததற்காக மாண்புமிகு அமைச்சர் ரகுபதி அவர்களை மனதாரப் பாராட்டுகிறோம்; வாயார வாழ்த்துகிறோம்.

நாம் கடல் கடந்து உலகமெல்லாம் சென்று பொருள் ஈட்டினோம். மனம் திறந்து உண்மையைச் சொல்வோமானால் நாம் ஈட்டிய நாடுகளில் ஆலயங்கள் கட்டினோமே தவிர வேறு அறப்பணிகள் செய்யவில்லை. ஈட்டிய பொருளையெல்லாம், தாயகத்திற்குக் கொண்டு வந்து காசி முதல் கன்னியாகுமரி வரை ஆலயங்கள், சத்திரங்கள், பசுமடங்கள், கல்விக் கூடங்கள், முதலியவைகள் கட்டிவைத்து தர்மம் செய்தோம். அப்படிச்செய்த திருப்பணிகளுக்கும், தமிழ்ப் பணிகளுக்கும் உயர்வு தந்து சிறுபான்மை இனமாக இருந்தும் நமக்கு வாய்ப்பளித்து, உழைப்பிற்கும், திறமைக்கும் மதிப்பளித்து, இளைஞர், நல்லவர், வல்லவர், வழக்கறிஞர் எஸ். ரகுபதி அவர்களை மாண்புமிகு அமைச்சராக்கி, புதிய வரலாறு படைத்துள்ள தமிழக முதல்வர், பொன்மனச் செல்வி புரட்சித் தலைவி, டாக்டர் ஜெயலலிதா அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். திரு. எஸ். ரகுபதி அமைச்சரானதில் நம் இனத்தில் ஒரு இலட்சம் பேரும் அமைச்சரான மகிழ்ச்சியை அடைகிறோம்.

சுதந்திரத்திற்கு முன்பு டாக்டர் ராஜா சர் முத்தையாச் செட்டியாரவர்கள் கல்வி அமைச்சராகத் தொண்டாற்றி இருக்கிறார்கள். புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்தபோது வழக்கறிஞர் இராயவரம் சண்முகம் செட்டியாரவர்கள் அமைச்சராகத் தொண்டாற்றியிருக்கிருர்கள். சுதந்திரத்திற்குப் பிறகு மத்திய அரசில் ப. சிதம்பரம் அவர்கள் இரண்டாவது முறையாக அமைச்சராகத் தொண்டாற்றி வருகிறார்கள். இப்பொழுது இந்தச் சிறப்பு திரு. ரகுபதிக்குக் கிடைத்துள்ளது.

திரு. ரகுபதி அவர்கள் விரையாச்சிலை லெட்சுமிபுரத்தில் திரு. சேவுகன் செட்டியாருக்கும், திருமதி சிந்தாமணி ஆச்சிக்கும் மகனாகப் பிறந்தவர்கள். வயது 42 B. Sc., B. L பட்டம் பெற்றுப் புதுக்கோட்டையில் வழக்கறிஞராகத் தொழில் செய்து வந்தார்

இராங்கியத்தில், தமிழகத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்களுக்கு 15–3–92 அன்று சிறப்பான வரவேற்பு அளிக்கப் பெற்றது. அப்போது வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் சார்பில் ஆயிரம் பேருக்கு அன்னதானத்தையும் ஐநூறு பேருக்கு இலவச வேட்டி, சேலைகளையும் அமைச்சர் மாண்புமிகு ரகுபதி அவர்கள் வழங்கினார்கள்.




கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களாலும் அவருடைய கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டு அ. தி. மு. க. வில் உறுப்பினராகி 1977 முதல் 1980 வரை புதுக்கோட்டை அ. தி. மு. க. வி[illegible]ச் செயலாளராக இருந்து 1[illegible]0 முதல் புதுக் கோட்டை மாவட்ட அ. தி. மு. க செயலாளராகப் பணியாற்றி வருகிருர். கட்சியில் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய ஒரே நகரத்தார் திரு ரகுபதி அவர்கள்தான். புரட்சித் தலைவி கட்சியில் பொறுப்பேற்றுக் கொண்ட நாள்முதல் இன்றுவரை புரட்சித் தலைவருடைய ஆதரவாளராகவே திரு. ரகுபதி இருந்து வருகிறார். புரட்சித் தலைவரின் மறைவுக்குப் பிறகு ஜா. அணி, ஜெ. அணி என்று அ. தி மு. க. இரண்டாகப் பிளவு பட்டபோது ஜெ. அணிக்கு ஆதரவாகவே இருந்தார். 1989ல் நடந்த தேர்தலில் ஜெ அணியில் திருமயம் தொகுதியில் போட்டியிட்டு ஒரு சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பினை இழந்தார். முன்னாள் அமைச்சர் திரு. திருநாவுக்கரசுக்கு நெருங்கிய நண்பராகயிருந்த போதிலும், திரு. திருநாவுக்கரசுக்கும், புரட்சி தலைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்ட போது, புரட்சித் தலைவிக்கு ஆதரவாக திரு. ரகுபதி பணியாற்றினார். அப்படிப் பணியாற்றியபோது அரசியல் காரணமாக, திருச்சி சிறையில் இருக்கவேண்டிய நிலையும் அவருக்கு ஏற்பட்டது. இப்படி அடுக்கடுக்கான சோதனைகளையும், வேதனைகளையும் கடந்து புரட்சித் தலைவியின் புகழ் பாடிப் புதுக்கோட்டையைப் புரட்சித் தலைவியின் கோட்டையாக மாற்றினார்.

''காட்சிக்கு எளியன்,
கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.''

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப ரகுபதி காட்சிக்கு எளியவர்; அன்பின் பிறப்பிடம்; பண்பின் உறைவிடம்; கடுசொல் பேசி அறியாதவர், அவர் கட்சியில் ஈடுபடாமல் வழக்கறிஞர் தொழிலை மட்டும் பார்த்திருந்தால் இலட்சக்கணக்கில் பணம் சம்பாதித்திருப்பார். அவர் கட்சியில் ஈடுபட்டது 'வீட்டுக்கு நட்டம் நாட்டிற்கு இலாப'மென்று 15 ஆண்டுகளுக்கு முன்பே நான் அவரிடத்தில் கூறியிருக்கிறேன். அதற்கு அவரும் ''இலாப நட்டக் கணக்குப் பார்ப்பதற்கு நான் வியாபாரி இல்லை. நான் கட்சியின் அடிமட்டத் தொண்டன் தான். என்னை முழுமையாகக் கட்சியில் ஈடுபடுத்திக் கொண்டு விட்டேன். எனக்கு நாடு முக்கியம்; வீடு அடுத்ததுதான்'' என்று சொல்வார். அன்போடு பழகுவதாலும், யார் என்ன வேலை சொன்னாலும் மனம் கோணாது பார்த்துக் கொடுப்பதாலும், அவரைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். அது சட்டமன்ற உறுப்பினரான பிறகு இன்னும் அதிகரித்தது. அமைச்சர் ஆனபிறகு மாநாடு நடப்பது போல் கூட்டம் கூடுகிறது.

அமைச்சர் ஆவதற்கு முன்பு ஸ்லாக் சட்டை போட்டுக் காட்சி



சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் உரையாற்ற 15–3–92 அன்று கோவிலூர் சென்ற திரு வி. என். சிதம்பரம் செட்டியாருக்கு அங்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப் பெற்றது. படத்தில் கோவிலூர் சுவாமிகளுடன் திரு. வி. என். சிடி., காசிஸ்ரீ திரு. அரு. சோ., பிரம்மச்சாரி திரு. இராமு.

யளிப்பார். துண்டு போட்டுக் கொள்வதில்லை. அமைச்சர் ஆன பிறகும் அதே காட்சிதான். அமைச்சர் ஆவதற்கு முன்பு அம்பாசிடர் காரில் 10 பேரில் ஒருவராகப் பயணம் செய்வார். அமைச்சர் ஆன பின்பும் அதே காட்சிதான். அவருக்கு மது அருந்தத் தெரியாது; புகைப் பிடிக்கத் தெரியாது; புலாலும் உண்ணத் தெரியாது. புதுக் கோட்டை இரண்டாம் வீதியிலே ஒரு சிறிய வீடு. எளிய குடும்பத்தில் பிறந்து திறமையால் முன்னுக்கு வந்தவர். அவரது பிறப்பால் நகரத்தாருக்குப் பெருமை; வளர்ப்பால் கட்சிக்குப் பெருமை; திறமையால் அமைச்சரவைக்கும், அமைச்சர் ஆக்கிய தமிழக முதல்வருக்கும் பெருமை.

ஒவ்வொரு வெற்றி பெற்ற மனிதனுக்குப் பின்னாலும் ஒரு பெண்மணியிருப்பதாகச் சொல்வார்கள். அது ரகுபதியைப் பொறுத்தமட்டில் முற்றிலும் உண்மை. அவரது துணைவியார் திருமதி சரோஜா ஆச்சி குழிபிறையில் பிறந்தவர். மலேசியாவில் கல்வி பயின்றவர், புதுக்கோட்டையில் ஆசிரியையாகப் பணியாற்றிய பெருமையுடையவர். ரகுபதியின் திறமைக்குப் போட்டியாக ஒருவரை அமைச்சராக்க வேண்டுமென்றால் அவருடைய துணைவியார் திருமதி சரோஜா ஆச்சியை அமைச்சராக்கலாம். அவ்வளவு திறமைசாலி. அவர்களுக்கு வள்ளியம்மை என்ற புதல்வியும், அண்ணாமலை என்ற புதல்வனும் உண்டு. திட்டமிட்ட குடும்பம். தேர்தலுக்கு முதல் நாள் மகள் வள்ளியம்மைக்குத் திரு

மணம் நடந்தது. மாப்பிள்ளையின் ஊர் இராங்கியம்.

கணவன் பணியில் கணவனுக்கும் அவர் சார்ந்துள்ள கட்சிக்கும் பெரும் திறமையோடு பணியாற்றித் துணை செய்பவர் திருமதி சரோஜா ஆச்சி. சென்ற தேர்தலுக்கு ஒரு வாரம் முன்பு புதுக்கோட்டைக்கு அவர் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். திரு. ரகுபதி தேர்தல் பிரசாரத்திற்குச் சென்றிருப்பதாகவும் வீட்டில் இல்லை என்றும் சொன்னார்கள். அந்த நேரத்தில் சரோஜா ஆச்சி என்னை அழைத்து, ஒரு பேரேட்டைப் புரட்டிப் பார்த்தார்கள். எனக்கும் பேரேட்டைப் புரட்டிப் பழக்கமுண்டு வராத பாக்கிகளை வசூல் செய்வதற்காக. ஆனால் அவர்கள் பேரேட்டைப் புரட்டித் திருமயம் தொகுதியில் ஒரு இடத்தைச் சொல்லி இந்த இடத்தில் நீங்கள் போய்ப் பார்த்துக் கட்சிக்காரர்களிடம் இருந்து அந்த ஓட்டைப் பெற்றுத்தர வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் சொன்னபோதுகூட திரு ரகுபதிக்கு என்று சொல்லவில்லை. 'கட்சிக்கு' என்று சொன்னார்கள். அவருடைய அறிவாற்றலையும், அணுகுமுறையையும் கண்டு நான் அப்படியே அசந்துவிட்டேன். 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்ற கவியரசு கண்ணதாசனின் வரிகள் என் நினைவில் எழுந்தன.


இவ்வளவு மகிழ்ச்சிக்கிடையே என் மனத்தை வருத்தும் ஒரு நிகழ்ச்சியையும் சொல்லித்தான் ஆக வேண்டும். சரோஜா ஆச்சியினுடைய தந்தையார் குழிபிறை சிங்காரம் செட்டியார் அவர்கள் மலேசியாவில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்கள். அவர்கள் என்னுடைய பழைய-நீண்டகால நண்பர். அவர்கள் பேத்தி வள்ளியம்மையின் திருமணத்திற்குப் புதுக்கோட்டைக்கு வந்து மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார்கள். பேத்தி திருமணத்திற்குப் பிறகு இரண்டு தினங்களில் மாப்பிள்ளை சட்டமன்ற உறுப்பினரானதிலும் மகிழ்ச்சி அடைந்தார்

கள். ஆனால் மாப்பிள்ளை அமைச்சராவதற்கு ஒரு வாரம் முன்பு அந்தக் காட்சியைக் காணாமல் மலேசியாவிலேயே சிங்காரம் செட்டியார் அவர்கள் இறைவனோடு ஐக்கியமாகி விட்டார்கள்.

நகரத்தார்க்கு இறைவனளித்த பரிசு திரு ரகுபதி. அன்பிலும், அரவணைத்துச் செல்வதிலும், டாக்டர் ராஜா சர் முத்தையாச் செட்டியாரவர்களைப் போலவும், அறிவிலும், மதிநுட்பத்திலும் வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியாரவர்களைப் போலவும், தமிழ்ப் பற்றிலும், உறுதியிலும் கலைத்தந்தை கருமுத்துத் தியாகராசச் செட்டியாரவர்களைப் போலவும், திறமையில் அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்களைப் போலவும், கொள்கைப் பிடிப்பிலும், எளிமையிலும் பெரியவர் கம்பன் அடிப்பொடி சா. கணேசனாரைப் போலவும், பாசத்தில், பண்பில் லெ. அழகுசுந்தரம் செட்டியாரவர்களைப் போலவும், அனைத்துத் திறமைகளும் பெற்று மாண்புமிகு அமைச்சர் ரகுபதி அவர்கள் தமிழகத்திற்குச் சிறந்த தொண்டாற்ற அன்னை மீனாட்சியை வணங்குகிறேன்.

அவரை நகரத்தார் பெருமக்கள் சார்பில் பல்லாண்டு பாடி வாழ்த்துகிறேன்.

மன்னுசீர் நகரத் தார்கள் மரபினுக் கேற்ற மைந்தர்
சென்னையில் சட்ட மன்றச் சீர்மிகும் அமைச்ச ராகிப்
பொன்மனச் செல்வி ஆட்சி பொலிவுற உழைக்கும் செம்மல்
நன்மையும் புகழும் சூழ்ந்த ரகுபதி என்றும் வாழ்க !



கோவிலூர் இலக்குமி மண்டபத்தில் கோவிலூர் சுவாமிகளுடன் (இ-வ) திரு. மா. முத்துராமன், திரு. அரு. சோ., திரு. இராம. சிதம்பரம்செட்டியார், திரு. வி.என்.சிடி., திரு. சோம. நாராயணன், திரு. வெஸ்ட் வயிரவன் செட்டியார், திரு. நா. சுப்பிரமணியன் ஆகியோர்.

கலாமடம்-பாதரக்குடியில் வி. என். சிடி. க்கு வரவேற்பு

கலாமடம் – பாதரக்குடிக்கு 14—3—92 மாலை வருகை தந்த 'மீனாட்சி திருமைந்தன்' திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பெற்றது.

திரு. அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார் திரு. வி. என். சிடி. க்கு பொன்னாடை அணிவித்தார். திரு. சோம. நா. உரையாற்றும்போது 400 ஆண்டுச் சரித்திரம் கொண்ட புராதன மடம் இது என்றும் வி. என். சிடி. அவர்களை நல்ல வழியில் பயன்படுத்திக் கொள்ள தாங்கள் விரும்புவதாகவும் கலாமடம்–பாதரக்குடி டிரஸ்டுக்குத் தலைவராகப் பொறுப்பேற்று அவர்கள் செயலாற்றி இம் மடத்தைச் செழிப்புள்ளதாக ஆக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

முன்னதாக 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ வரவேற்புரையாற்றினார். இக் கூட்டத்தில் புலவர் மாமணி திரு. மா. முத்துராமனும் பேசினார்.

திரு. வி. என். சிடி. அவர்கள் ஏற்புரை நல்கும்போது சோம. நா. அவர்கள் தங்களுக்காக வாழ்ந்தவர்கள் இல்லை என்றும் தங்களைப் போன்றவர்கள் ஆன்மீகப்பணி செய்தாலும் தங்களுக்காகவும் வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிட்டார்கள். மேலும் தனக்கு பணிகள் இடைவிடாது இருந்து வருவதாகவும் கலாமடம் பாதரக்குடி டிரஸ்ட் தலைவர் பொறுப்பு பற்றிச் சிந்தித்து கூடிய விரைவில் முடிவு தெரிவிப்பதாகவும் கூறினார்கள்.

பாதரக்குடி ஆதீனத் தலைவர் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் சிறப்பு பூஜைக்குப்பின் உரையாற்றினார்கள். அப்போது காசி முதல் கன்னியாகுமரி வரை திருப்பணி செய்த பெருமைக்குரிய நகரத்தார்கள் தங்களின் குரு பீடமான இதையும் செழிக்க வைக்க முழு முயற்சி எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள்.

காசிஸ்ரீ திரு ஆர். வயிரவன் இசைத் தொண்டர் திரு. ந. காசி நாதன் ஆகியோர் பத்திப் பாடல்களைப் பாடினார்கள்.

'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. நன்றி கூறினார்.

சதாபிஷேகம்

நாட்டரசன்கோட்டை கண. க. சொ. சுந்தரராஜன் செட்டியார் அவர்களுக்கும் திருமதி கண்ணாத்தாள் ஆச்சி அவர்களுக்கும் 21—3—92 அன்று நாட்ரசன்கோட்டையில் சதாபிஷேக விழாச் சிறப்பாக நடைபெற்றது

தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஃ கவியரசு கண்ணதாசன் விழா 17-4-92 அன்று கோயமுத்தூரிலும் 26-4-92 அன்று சேலத்திலும் நடைபெற உள்ளன.



எனது ஆலய அனுபவங்கள்

வி.என். சிதம்பரம்

— 10 —

அடியேன் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபின்பு, ஆலய நிர்வாகத்தை நடத்தும் விதம் குறித்து கண்டறியும் பொருட்டு திருப்பதி சென்று அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோவில் நிர்வாக அதிகாரியைச் சந்தித்து பயிற்சி அளிக்கும்படி வேண்டினேன். அதற்கு அந்த நிர்வாக அதிகாரி ''திருப்பதி அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோவிலுக்கு பக்திப் பரவசத்தின் அடிப்படையில், உலகம் முழுவதிலுமிருந்து இலட்சக் கணக்கான பக்தர்கள் மதமாச்சரியம் இன்றி வருகைதந்து தரிசித்து கோடிக்கணக்கான பணத்தையும் வைரம், வைடூரியம், தங்கம், வெள்ளி போன்ற பொருட்களையும் உண்டியலில் குவித்துவிட்டும் செல்கிறார்கள். எங்களுக்கு பக்தர்கள் கொட்டுகின்ற பணத்தையும், பொருளையும் அள்ளுவதற்கே நேரம் போதவில்லை. ஆனால் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் பக்தியையும், வரலாற்றுச் சிறப்பு மிக்க பொக்கிஷங்களையும் கொண்டு புகழ் பெற்று விளங்குகிறது. இவ்வரலாற்றுச் சிறப்புக்களை அந்தச் சிற்பங்களின் கீழ்எழுதி விளம்பரப்படுத்த வேண்டும். அப்போதுதான் உலகளாவிய மக்களை ஈர்க்க முடியும்''

''குறிப்பாக, ஜெர்மனை ஆண்ட ஹிட்லர் தனது செயல்களை நியாயப்படுத்துவதற்காக



வும் பொய்யை மெய்யாக்குவதற்காகவும், கோயபல்ஸ் என்பவரை நியமித்து பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தார். அதாவது ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தால் (பிரசாரம் செய்தால்) அதுவே மெய்யாகிவிடும் என்பது ஹிட்லரின் கூற்று.''

''ஆனால் நாம் அன்னை

மீனாட்சி அம்மையின் அருளையும், சிற்பக்கலைச் சிறப்புக்களையும் பத்திரிகைகள் வாயிலாகவும் தொலைக்காட்சி வானொலி போன்ற சாதனங்கள்மூலமும்பிரச்சாரம் செய்து கொண்டே இருக்க வேண்டும். ஆலயச் சிறப்புக்களை நாம் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னால்தான் பாமர மக்களும் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். இதன் மூலம் ஆலயத்தின் பெருமை பரவிக் கொண்டே இருக்கும்,'' எனக்கூறியதோடு வருமானத்தைப் பெருக்குவதற்கான யோசனைகளையும் கூறினார். பின் அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயிலில் நடைபெறுகின்ற நிர்வாகப் பணிகளை எல்லாம் எனக்குக் காண்பித்து விளக்கிச் சொன்னார். கிட்டத்தட்ட ஒரு பேராசிரியரிடத்தில் பயின்ற மாணவனுக்கு ஏற்பட்ட அனுபவம் எனக்கு ஏற்பட்டது. காரணம் அவர், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. இத்திருக் கோவிலின் நிர்வாக அதிகாரிக்கும் அறங்காவலர் குழுத் தலைவர் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் மாநில அமைச்சருக்கான அந்தஸ்தை பக்தர்களும் பொதுமக்களும் தருகிறார்கள். காரணம் போப் ஆண்டவர் அரசோச்சும் ரோமாபுரியிலுள்ள வாடிகன் சிட்டிக்கு அடுத்தபடியாக வருமானம் இத்திருக்கோவிலுக்கு வருகிறது. ஆந்திர அரசாங்கத்திற்கே கடன் வழங்கக்கூடிய சக்தியை இத்திருக்கோவில் பெற்றுள்ளது.

அவர் சொன்னதை எல்லாம் மிகுந்த கவனத்துடன் கேட்டு மனதில் பதிய வைத்துக் கொண்டு அவரிடமிருந்து பிரிய மனம் இன்றி, நன்றி கூறி விடைபெற்ற போது அவர் சிரித்துக்கொண்டே ஒன்றைச் சொன்னார்; ''ஆலயத்தில் குருக்களாகப் பணியாற்ற வேண்டும் என்றால் வேதம் படித்துத் தேறியிருக்க வேண்டும். ஆலய நிர்வாக அதிகாரியாக வர வேண்டும் என்றால் படித்துப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். எழுத்தராக (கிளார்க்) வேண்டும் என்றால் படிப்பு அவசியம். ஆனால் எந்தப் படிப்பும் இன்றி அடையக்கூடிய பொறுப்பு இந்த அறங்காவலர் குழுத் தலைவர் பொறுப்புத்தான். இப்பதவி கிடைக்க வேண்டும் என்றால் ஒன்று அரசியல்வாதியாக இருக்க வேண்டும். இல்லாவிடில் அரசியல் செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும். அல்லது செல்வந்தராக இருக்க வேண்டும். ஏதோ ஒரு வழியில் இப்பதவியைப் பெற்றிட்டாலும் அப்பதவியை நிர்வகிக்கக்கூடிய திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் நிர்வாக அதிகாரி தனது பணியை திறம்படச் செய்ய, அறங்காவலர் மாலை மரியாதையை மட்டும் பெற்றுக் கொண்டே இருக்கலாம். அப்படியின்றி, நிர்வாக அதிகாரியை, அறங்காவலர் குழுத் தலைவர் தனது திறமையைப் பயன்படுத்தி வேலை வாங்க வேண்டும். அதன் வாயிலாக அவர் தனக்கென ஓர் இடத்தைப் பெற்று பக்தர்கள் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்று நீடித்த புகழை அடைய முடியும்'' என்று கூறினார். அவர் அறிவுரையை ஏற்று அதன்படி செயல்படத் தொடங்கினேன்.

(தொடரும்)

உங்கள் குரல்

காரைக்குடியில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் கலந்து கொள்ள முடியவில்லையே என்று வருத்தப்பட்டேன். 'எல்லெஸ்' அண்ணன் அவர்கள் செய்திகளைத் தொகுத்து வெளியிட்டிருந்தவிதம் என் வருத்தத்தைப் போக்கிவிட்டது. டாக்டர் அர. சி. அவர்களுடைய அட்சரலட்சம் பெறும் கவிதையை முழுமையாக வெளியிட்ட குரலுக்கு நன்றி.

சி. ஜம்புலிங்கம்
மதுரை

'மாதவம் செய் நகரத்தார் வீட்டுப் பெண்கள் மணக்கோலம் காணவரம் தருவா யப்பா' என்ற சென்ற இதழின் முகப்பு அட்டையின் கவிதை வரிகளை எழுதிய பொற்கிழிக் கவிஞர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

செந்தில் வ. குமரப்பன்
பலவான்குடி

மார்ச்' 92 இதழில் திரு. எஸ். ரகுபதி அமைச்சரான செய்தியையும் படத்தையும் வெளியிட்டு குரல் பெருமை சேர்த்துக் கொண்டது.

ஏ என். சிதம்பரம்
விரையாச்சிலை

''எனது ஆலய அனுபவங்கள்'' கட்டுரையில் ஆசிரியர் வி. என். சிடி. அவர்கள் சா. கணேசனாரை நக்கீரர் உருவில், விசுவாமித்திரர் உருவில் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். சா. க. அவர்கள் கோபத்தின் உச்சக் கட்டத்தில் இருந்ததையும் கண்டிப்பில் உறுதியாக இருந்ததையும் நேரில் பார்த்தவன் நான். எனவே விசுவாமித்திரர் என்ற உவமை சாலப் பொருந்தும்.

மார்ச் '92 இதழ் கண்ணதாசன் சிறப்பு மலராக மலர்ந்துள்ளது கண்டு மகிழ்ச்சியுறுகிறேன்.

குமட வள்ளியப்பன்
பலவான்குடி

குரலில் சிரிப்புப் பகுதி இல்லையே என்று கவலை கொண்டிருந்த எனக்கு 36 ஆம் பக்கத்தில் வெளிவந்த சிலுக்கு பற்றிய துணுக்கு ஓராயிரம் சிரிப்பை வழங்கியது.

எம். நாச்சியப்பன்
சென்னை

கண்ணதாசன் பற்றி திரு. முக்தா சீனிவாசன் பேசிய பேச்சு முத்தாக இருந்தது.

எஸ். அண்ணாமலை
திருச்சி

மார்ச்' 92 இதழ் கவியரசர் கண்ணதாசனின் சிறப்பு மலராகத் திகழ்ந்தது. அதில் அர. சி. அவர்களின் உயிர்த் துடிப்புள்ள கவிதையும் திரு. முக்தா சீனிவாசன் அவர்களின் உயிரோட்டமான பேச்சும் சிறப்பாக இருந்தன. 'எங்கள் போதாத காலம்' என்ற துணுக்கும் சிலுக்கு பற்றிய துணுக்கும் வாய்விட்டுச் சிரிக்கும்படி இருந்தன.

— பழ. இராமசாமி
தஞ்சாவூர்

91/1

கவிஞர் முத்தையா உடையப்பன்

இலக்கிய உணர்வும் மொழிப் பற்றுமிக்க 'தமிழ்த் தென்றல்' திரு. வி. க. வின் வாரிசாக, தமிழ்த் தொண்டை, தன் தலையாய பணியாகக் கொண்டு நாம் பெருமையுறும் வண்ணம் சிறப்புறப் பணியாற்றி செம்மையுற வாழ்ந்து வருபவர் கவிஞர் திரு. முத்தையா உடையப்பன் ஆவார்.

திரு. முத்தையா உடையப்பன் தேவகோட்டையில் பிறந்தவர். மாத்தூர்க் கோவில் மணலூர் பிரிவைச் சேர்ந்தவர். 54 வயதாகும் திரு. உடையப்பன் தமிழ்த் தொண்டையும் தொழிற் சங்கப் பணியையும் தன் இரு கண்களெனப் போற்றி வருகிறார்.

இவரது தந்தையார் 'இராஜபாளையம் மு' என்றழைக்கப்படும் முத்தையா செட்டியாராவார். தாயார் லெட்சுமி ஆச்சி ஆவார். இவரது தந்தையார் செட்டி நாட்டரசரவர்களின் நிறுவனத்தில் 45 ஆண்டுகள் பணியாற்றியவர்.

இவர் 1957 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. காம் படித்து முதன்மையாகத் தேறியவர். பின் 1968ம் ஆண்டில் வங்கித் தேர்வு பயின்று சி. ஏ. ஐ. ஐ. பி பட்டம் பெற்றார். கடந்த 22 ஆண்டுகளாக பாரத ஸ்டேட் வங்கியின் தலைமையகத்தில் அதிகாரியாக பொறுப்பேற்றுப் பணியாற்றி வருகிறார்.

இவரது அலுவலகப் பணியுடன் இலக்கியப் பணியிலும் கண்ணிமையென இணைந்து பணியாற்றிவரும் அகில இந்திய எழுத்தாளர் சங்கத்தின் செயலாளரான ஏர்வாடி திரு. இராதாகிருஷ்ணனுடு சேர்ந்து தொழிற் சங்கத்தில் 'இலக்கிய அணி' 'கலைப்பிரிவு' என்ற அமைப்புக்களை உருவாக்கினார். 'இல்லந்தோறும் இலக்கிய நிகழ்ச்சி' என்ற அமைப்பின் மூலம் திங்கள் தோறும் இலக்கிய அன்பர்களைக் கூட்டுவித்து இலக்கியச் சுவை



யோடு இனிய உணவும் உவந்தளித்து தமிழ்த் தொண்டாற்றி வருகிறார் திரு. முத்தையா உடையப்பன்.

வங்கியில் ஆட்சி மொழித் துறையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றியபோது, இவ்வங்கி அதிகாரியும் கவிஞருமான ஏர்வாடி திரு. இராதாகிருஷ்ணனுடு இணைந்து ''வங்கிக் கலைச் சொல் அகராதி'' என்ற நூலினை உருவாக்கினார். இந்நூல் புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களால் வெளியிடப்பட்டது.

''செட்டி நாடும் தமிழும்'' என்ற நூலில் திரு. சோமலெ கவிஞரைப் பற்றி எழுதியுள்ளார்கள். பாரத ஸ்டேட் வங்கியின் ''சென்னைத் தொடர்பு'' என்ற தனிச் சுற்று இதழின் ஆசிரியராக இவர் ஐந்து ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ளார்.

''கவிதை உறவு'' திங்கள் தோறும் நடத்தும் கவியரங்கத்தின் முதன்மைக் கவிஞர் திரு. முத்தையா உடையப்பனுவார். ''எங்கே போகிறோம், என்ன செய்வோம்?'' என்ற இவரின் கவிதை சிறப்பிற்குரியதாகும்.

தமிழார்வம் கொண்டுள்ள இவர் தன் அலுவலகத்திலும் வீட்டிலும் தினம் ஒரு திருக்குறளை பார்வையாளர்கள் படித்துணர எழுதி வைக்கிறார். மயிலை திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவராகயிருந்துவருகிறார். தூய உளளமிக்க இவரது துணைவியார் திருமதி லெட்சுமி ஆச்சி தேவகோட்டை அன்றைய பாவரனி ஜமீன்தாரும் இன்றைய ஈசான சிவாச்சாரிய குருவுமான திரு சிதம்பரம் செட்டியாரின் புதல்வியாவார். இவர்களுக்கு இரு புதல்வர்கள். திரு. கண்ணன் ஸ்பிக் நிறுவனத்திலும், திரு முத்தையா மெட்ராஸ் சிமிண்ட் நிறுவனத்திலும் பணியாற்றி வருகிறார்கள்.

நம் மகளிரின் கல்வி ஆர்வத்தில் தாம் மகிழ்வுறுவதாகவும், கல்விக் கூடங்களில் நமக்கு இன்னும் கூடுதலான இட ஒதுக்கீடு பெற்றிட முயலவேண்டுமென்றும் அரசு நம்மை பிற்பட்ட இனமாக அறிவிக்க நாம் முயலவேண்டுமென்றும் படித்த நம் இளைஞர்கள் வங்கியின் உதவியோடு சிறு தொழிற் துறைகளில் ஈடுபட்டு முன்னேற்றம் காணவேண்டுமென்றும் தம் எண்ணங்களைத் தெரிவித்தார்.

திரு. முத்தையா உடையப்பன் மேலும் பல சிறப்புகளைப் பெற ''நகரத்தார் குரல்'' வாழ்த்துகிறது.

நேர்முகம் : மேஜு. அன்புமணி

எமது நல் வாழ்த்துக்கள்!

ஓரியண்ட் PVC பைப்ஸ்
அருண் HDPE பைப்ஸ்

orient
RIGID PVC PIPES

ARUN
HDPE PIPES

விவசாயம், தொழிற்சாலை, போர்வெல் மற்றும் வீட்டு உபயோகங்களுக்கு சிறந்த PVC & HDPE பைப்புகள்

- விலை குறைவு.
- தரம் உயர்வு.
- நீடித்த உழைப்பு.
- ஐஎஸ்ஐ பைப்புகளுக்கு நிகரானவை.



தயாரிப்பாளர்கள் :
சேலம் பைப்ஸ் (பி) லிமிடெட்,
27, சேலம் கூட்டுறவு தொழிற்பேட்டை லிட்,
உடையாப்பட்டி, சேலம்-636140.
☎ 68717

கிடைக்குமிடம் :
சேலம் பைப் டிரேடர்ஸ்,
4, சிட்டுக்கோவில் தெரு,
சேலம்-636001.
☎ 65038, 67941

Sales Depot :

Salem Pipes (P) Ltd.,
Kings Complex
343, Dr. Nanjappa Road,
Coimbatore - 641 018
Phone : 36946

கோவிலூரில் சிந்தனைப் பூங்கா

கோவிலூரில் இலக்குமி மண்டபத்தில் 14-3-92 காலை சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சி நடைபெற்றது. ஆசிரியர் திரு சுப்பிரமணியன் இறை வணக்கம் பாட காசிஸ்ரீ திரு. அரு. சோ. வரவேற்புரை நிகழ்த்த 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் 'மதுரை அருள் மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில்' என்ற தலைப்பில் சிந்தனை உரை நிகழ்த்தினார்கள்.

'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. தமது வரவேற்புரையில் கூறியதாவது :-

சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியை ஆறு மாதங்களுக்கு முன்பு இங்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இது ஆறுவது நிகழ்ச்சியாகும்.

பொன்னான பதவியில் 9 ஆண்டுகள் மதுரை மீனாட்சிக்கு சிறந்த இறைத் தொண்டு செய்தவர் நம் வி. என். சிடி. அவர்கள். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தங்க ரதம் பவனி வரச் செய்தவர்கள். மீனாட்சி திருக்கல்யாண சன்னதியை ஏற்படுத்தி ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடையும் அளித்தவர்கள். முதன் முறையாக வழி நடைப் பயணமாக நாங்கள் காசி சென்று திரும்பி வந்தபோது எங்களுக்குக் கோவிலில் சிறப்பான வரவேற்புக் கொடுத்தார்கள். ''அங்கயற் கண்ணியின் அற்புதங்கள்'' என்ற அருமையான நூலை எழுதியிருக்கிறார்கள். மதுரை மீனாட்சியம்மன் கோவிலைப் பற்றிப் பேச மிகவும் பொறுத்தமானவர்கள் அவர்கள். அவர்கள் நிறைய இறைத் தொண்டு செய்ய வேண்டும். ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வது நம் கடமை.

— இவ்வாறு அவர் கூறினார்.

திரு. வி என். சிடி. அவர்கள் பேசுகையில் கூறியதாவது :—

சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் பேசுவதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். 1974ல் இங்கு நான் வந்திருக்கிறேன். அடிக்கடி வராதது என் தவறு. கிறிஸ்தவர்களுக்கு வாடிகன் சிட்டி போல் நகரத்தாருக்கு கோவிலூர் மடாலயம். கோவிலூர் மடாலயம் பற்றி சிறு சிறு புத்தகங்களை அச்சிட்டு வெளியிட வேண்டும். வெளி நாடுகளில் மிகுதியாக உள்ள பணத்தை இங்கு கொண்டுவந்து சுவாமிகளின் ஆலோசனைப்படி செய்ய வேண்டும்

— இவ்வாறு அவர்கள் பேசினார்கள்.

தவத்திரு காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகளின் அருளுரைக்குப்பின் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. நன்றி கூறினார்.

திரு. அரு. சோ. தன் பேச்சினிடையே வி. என். சிடி அவர்களை 'சிதம்பர பாண்டியன்' என மூன்று நான்கு முறை குறிப்பிட்டார்.


அரிமழம் தெப்பத் திருவிழா

'திருவாரூர்த் தேரழகு, அரிமழம் தெப்பமழகு' என்று சொல்லத் தக்க வகையில் அரிமழத்தில் நடைபெறும் தெப்பத் திருவிழாவின் பெருமையை அனைவரும் அறிவர்.

அரிமழத்தின் அழகிற்குப் பெரிதும் துணைநிற்பது இரு நீர்நிலைகள். ஜெயவிளங்கியம்மன் திருக்கோவிலைச் சார்ந்து வலப்புறத்தே அமைந்திருப்பது சிறிய பொற்குடையான். இது குடிநீர் ஊருணி. இதனையடுத்துக் கிழக்கில், தென்னைகள் சூழ்ந்து வனப்புடன் அமைந்திருப்பது பெரிய பொற்குடையான். இது குளிநீர் ஊருணி. இன்றைக்குச் சுமார் 260 ஆண்டுகளுக்கு முன்னர் கா. ச. வகையார் இந்நீர் நிலைதொட்டு நீங்காப் புகழைப் பெற்றுள்ளார்கள்.

அரியக்குடி, திருச்செந்தூர் போன்ற பெரிய கோவில்களுக்குத் தெப்பம் செய்த நெல்லை மாவட்டம் வீரவநல்லூர் சிற்பியாம் சாமி ஆசாரியர் அரிமழம் வந்தபொழுது, பெரிய பொற்குடையான் ஊருணியின் அழகினைக் கண்டு, அழகிய தெப்பம் செய்து விட்டால், இதன் சிறப்பு மேலும் கூடும் எனத் தெரிவித்து, ஊருணியின் உரிமைக்கு உடையவர்களை அழைத்துப் பேசி, அழகிய தெப்பத்தை உருவாக்கித் தந்தார்கள். ஊருணியின் நடுவில் அமைந்துள்ள அழகிய மைய மண்டபத்திற்கு இணையாக அழகிய தெப்பம் உருவானது.

பக்தர்கள் தங்களின் 59 ஆம் ஆண்டு நிறைவு விழாவைத் திருக்கடையூரில் கொண்டாடி ஆயுளை நீட்டித்துக் கொள்வதைப் போல்,



அரிமளம் பெரிய பொற்குடையான் குளிநீர் ஊருணியில் மைய மண்டபத்தின் அருகே தெப்பம் வலம் வரும் கண்ணுக்கினிய காட்சி (பழைய படம்)

புது மொழி

பொருள், கஷ்டத்தைக் காப்பாற்றும்;
அருள், ஆபத்தைக் காப்பாற்றும்.

— 'காசிஸ்ரீ' அரு. சோ.

(கோவிலூரில் 14-3-92 அன்று நடைபெற்ற 'சிந்தனைப் பூங்கா' நிகழ்ச்சியில்)

அரிமழம் தெப்பமும் அதன் 59 ஆம் ஆண்டில் கோவிலூரில் 21-4-78 அன்று வலம் வந்து காட்சி தந்தது. 60 ஆம் ஆண்டில் (1979 ஆம் ஆண்டு) சித்ராபௌர்ணமிக்கு மறுநாள் அரிமழம் பொற்குடையானில் வலம் வந்து காட்சி தந்தது.

பெரிய பொற்குடையான் மைய மண்டபத்தின் 60 ஆம் ஆண்டு நிறைவினை ஒட்டித் திரு. ச. அ. சோம. அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் முயற்சியால், அரிமழம் கா. ச. வகை தெய்யனூர் வகுப்புப் புள்ளிகள் அனைவரும் சேர்ந்து மைய மண்டபக் கோபுரத்தை அழகுறப் புதுப்பித்தும், மின் இணைப்புக் கொடுத்தும் திருப்பணி செய்துள்ளார்கள்.

நீர்நிலை வரண்டிருந்த காரணத்தால் கடந்த ஏழாண்டுகளாகத் தெப்பத் திருவிழா நடைபெறவில்லை. இறைவன் திருவருளால் நீர்நிலை இப்போது போதுமானதாக இருப்பதால் சித்ரா பௌர்ணமிக்கு மறுநாள் (18-4-92 சனிக்கிழமை) இரவு அரிமழத்தில் தெப்பத் திருவிழா நடைபெற உள்ளது.


வி. என். சிடி. க்கு அரு. சோ. பாராட்டு!

திரு. வி. என். சிடி. அவர்கள் நல்லன செய்தவர்களை நன்றியுடன் நினைக்கக் கூடியவர்கள்; நன்றியுடன் பாராட்டக் கூடியவர்கள்.

அவர்கள் திரு. சொ. சொ. மீ. சுந்தரத்தை 'என் குரு' என்பார்கள். என்னை முதன் முதலாக மேடைக்கு அழைத்துப் பேசச் செய்தவர் புலவர் மாமணி திரு. முத்துராமன் என்பார்கள். அதுபோல திரு. எல். சுந்தரத்தை 'அவர் எனக்கும் துணை; ''நகரத்தார் குர''லுக்கும் துணை' என்பார்கள்.

— காசிஸ்ரீ அரு. சோ.

(கோவிலூர் சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில்)



சென்னையில் 'கம்ப்யூட்டர் லேனு' என்று அனைவராலும் அழைக்கப்படும் திரு. ஆர் எம். லெட்சுமணன் செட்டியார் - திருமதி லெ. வள்ளியம்மை ஆச்சியின் 60ஆம் ஆண்டு நிறைவு மணி விழா புது வயலில் 4—3—92 அன்று சிறப்பாக நடைபெற்றது. இராங்கியம் திரு. அரு. சிவா அதில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார். அருகில் மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன்.

பட்டமங்கலத்தில் அன்னதானம்

பட்டமங்கலம் நகர மடத்தில் 10—3—92 கார்த்திகை தினத்தன்று தெண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேகம் செய்து ஏழை மக்கள் சுமார் மூவாயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப் பெற்றது. மறுநாள் 11—3—92 அன்று மங்கலப் பொருட்கள் ஏலம் விடப் பெற்றன.

கோவிலூரில் வி. என். சிடி. க்கு வரவேற்பு

கோவிலூருக்கு 14—3—92 காலை வருகை புரிந்த 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பெற்றது.

வி. என். சிடி. அவர்களுக்கு கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிசுவநாத ஞான தேசிக சுவாமிகள் பொன்னாடை அணிவிக்க, காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் மாலை அணிவித்தார்.

கோவிலூரில் அமைந்துள்ள கொற்றவாளீஸ்வரர் திருநெல்லையம்மன் ஆலயத்திற்கு இரசிகமணி திரு. ஆர். எம். சிதம்பரம் செட்டியார் காசிஸ்ரீ திரு. அரு. சோ. போன்றவர்கள் திரு. வி. என். சிடி. அவர்களை அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்து அக்கோவிலின் வரலாற்றை எடுத்துக் கூறினார்கள்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ மதுரையில் சித்திரைத் திரு விழாவையொட்டித் தமிழக அரசு சார்பில் 5–4–92 அன்று சித்தி ரைப் பொருட்காட்சி தொடங்கி 45 நாட்கள் நடைபெற விருக் கிறது.

ஃ நாட்டரசன்கோட்டையில் ஸ்ரீ கண்ணுடைய நாயகி அம்மன் கோவில் வைகாசித் திருவிழா விற்கு 4-6-92 (வைகாசி மீ 22உ) வியாழக்கிழமை [காப்புக் கட்டு கிறார்கள். [11–6–92] (வியாழன்) எட்டாம் திருநாளன்று வெள்ளி ரதம். 12–6–92 (வெள்ளி) ஒன்ப தாம் திருநாளன்று தேர்.

ஃ கோவிலூர் கொற்றவாளீஸ் வரர் திருநெல்லையம்மன் ஆலயத் தில் உழவாரப் பணியை காரைக் குடி பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா சமிதியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் அவ்வப்போது மேற் கொண்டு வருகிறார்கள்.

ஃ கலாமடம்–பாதரக்குடி ஆதீன கர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகள் ஒவ்வொரு சனி, ஞாயிறு காலை-மாலை வேளைகளில் காரைக்குடி அறுபத்துமூவர் மடத் தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்தி, சமஸ்கிருத பாட வகுப்பு களை இலவசமாக நடத்தி வருகி றார்கள்.

ஃ கோவிலூர் மடாலயத்தில் முதலாவது பட்டம் தவத்திரு ஸ்ரீமத் ஆண்டவருக்கு 18-3-92 புதன் கிழமையன்று உத்திர நட் சத்திரத்தில் குருபூஜை சிறப்பாக நிகழ்ந்தது.

ஃ சென்னை முத்தமிழ் ஆய்வு மன்றத்தின் சார்பாக 22-3-92 அன்று காலை கவிஞர் கோமகன் திரு. சொ. சுப்பையா செட்டியார் ''மரபுக் கவிதையின் மாண்பு கள்'' என்னும் பொருள் பற்றிச் சிறப்புரையாற்றினார்.

ஃ வானதி பதிப்பக உரிமையா ளர் திரு. ஏ. திருநாவுக்கரசுக்கு

'கல்கிதாசன்' 'அரசு' என்ற புனைப் பெயர்கள் உண்டு.

ஃ ஒக்கூர் சோமசுந்தரம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் 24 ஆம் ஆண்டு விழா 19–3–92 அன்று நடைபெற்றபோது பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ருத்சியா காந்தி தலைமை ஏற்று பரிசுகள் வழங்கி வாழ்த்துரை வழங்கினர்.


ஃ கல்லுப்பட்டி, மெய்யப்பா நடுநிலைப் பள்ளியின் வைர விழா 19-3-92 & 20-3-92 ஆகிய இரு தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

ஃ காரைக்குடி கண்ணதாசன் விழாவில் காரைக்குடியில் எல். கே. ஜி. படிக்கும் நந்தினி என்ற சிறுமி 'யாரை நம்பி நான் பொறந்தேன் போங்கடா போங்க' என்ற கண்ணதாசன் பாடலை அற்புதமாகப் பாடி, நடித்து பாராட்டைப் பெற்ருள்.

ஃ தேவகோட்டை அருள்மிகு கல்யாண சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் 18 ஆம் ஆண்டு பங்குனி உத்தரத் திருவிழா 18-3-92 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

ஃ காரைக்குடியில் 22-2-92 & 23-2-92 ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற கவியரசு கண்ணதாசன் விழாவை வாழ்த்தி தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெயலலிதா அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

ஃ நாட்டரசன்கோட்டையில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மனுக்கு சிவகங்கை தேவஸ்தானமும் நகரத்தாரும் சேர்ந்து தங்க அங்கி செய்து வருகிருர்கள்.



காரைக்குடி கண்ணதாசன் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமனுக்குத் துணை வேந்தர் திரு கே நாகப்பன் பொன்னாடை அணிவிக்கிருர். அருகே திரு வி. என். சிடி திரு பி. எஸ். ஆர்எம். இராமசாமி

கூடிய விரைவில் அம்மனுக்கு தங்க அங்கி சாத்துவிக்கப் பெறுமென்றும் அதனையொட்டிச் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப் பெறுமென்றும் கூறப் பெறுகிறது.

ஃ தேவகோட்டை ஸ்ரீ இராம கிருஷ்ண வித்யாலயத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா 6-3-92 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

ஃ தேவகோட்டை வெள்ளையன் ஊருணி மேல் கரையில் உள்ள அருள்மிகு கோதண்ட ராமஸ்வாமி திருக்கோவிலின் பிருஹ்மோத்சவ விழா 11-4-92 முதல் 21-4-92 வரை நடைபெற உள்ளது.

ஆசையை ஊட்டாத இயக்குநர்!

எளிமைக்கு மறு பெயர் எஸ்பி. முத்துராமன் என்பது. நான் திரைப்படம் எடுக்க விரும்பி அண்ணன் எஸ்பி. முத்துராமன் அவர்களை அணுகினேன். அவர்கள் ''உங்கள் குணத்திற்குத் திரைப் படம் எடுத்தால் ஒத்துவராது'' என்றார்கள். அவர்கள் எனக்குப் படம் தயாரிக்கும் ஆசையை ஊட்டவில்லை: வேறு ஒருவர் என்றால்.. சொல்லவே தேவையில்லை.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(காரைக்குடி கண்ணதாசன் விழாவில்.)

செட்டிநாடு வித்தியாஷ்ரமம் : கல்வி பற்றிய அறிவிப்பு!

சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள செட்டிநாடு வித்தியாஷ்ரமம் பள்ளியில் 1992-93 ஆம் ஆண்டில் இரண்டாம் வகுப்புப் படிக்க தகுதி மற்றும் பொருளாதார அடிப்படையில் தேர்வு செய்யப்படும் நகரத்தார் குழந்தைகள் ஆண்கள் இருவருக்கு படிக்கவும், உணவு, உடை கொடுத்து தங்குவதற்கும் அக்குழந்தைகள் மேற்கண்ட பள்ளியில் தொடர்ந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கவும் முழுச் செலவையும் ஏற்றுக் கொள்ள அப்பள்ளியின் நிறுவனர் குமாரராணி திருமதி மீனா முத்தையா அவர்கள் இசைந்துள்ளார்கள். அவ்வாறு சேர விரும்பும் குழந்தைகள் தங்கள் பெயர், தந்தை, தாயின் பெயர், பிறந்த தேதி, தற்சமயம் படித்து வரும் பள்ளி, பெற்றோரின் வருமானம் போன்ற முழு விவரங்களுடன் விண்ணப்பத்தை செட்டிநாடு வித்தியாஷ்ரமம் ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028 என்ற முகவரிக்கு 30-4-92 க்குள் அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். பெற்றோரின் மாத வருமானம் ரூ. 500/க்குள் இருக்க வேண்டு மென்றும் பிள்ளைகளைத் தேர்வு செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது என்றும் அறிவிக்கப் பெற்றுள்ளது.

நகர விடுதி கட்ட அரு. சோ. நன்கொடை

ஹைதராபாத் - செகந்தராபாத்தில் நகரவிடுதி கட்டுவதற்கு அதன் அமைப்புக் குழுவின் சார்பில் திரு என். முத்தையா செட்டியார் (தேவகோட்டை) ஈடுபட்டுள்ளார். மேற்படி கட்டிட நிதிக்கு காசிஸ்ரீ திரு அரு. சோமசுந்தரன் 9-3-92 அன்று ரூ. 1001/- நன்கொடை வழங்கி ஆசி கூறினர்.

செல்வத்தை உண்டாக்காமல் நுகர உரிமை கிடையாது.

- பெர்னாட்ஷா

மாணிக்க மாமலையே !

— முனைவர், சோ. கந்தசாமி —


(தலைவர், இலக்கியத் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்)

சான்றாண்மை போற்றும் தமிழ்ப்பெரும ! கற்றோருள்
தோன்றாண்மை மிக்க சுடர்ப்பரிதி ! கொள்கையினில்
என்னளவும் மாறாத ஏந்தலே ! எந்தமிழ்தான்
உள்ளளவும் வாழும் உரம்மிக்க பேராசான் !
மக்கட் பெயரெல்லாம் மாத்தமிழின் நற் பெயராய்
ஒக்கவைத்த பற்றாள ! உண்மைத் தமிழ்த்தொண்ட !
கல்லா இனம்எல்லாம் கற்கவைத்த வேள்என்றே
எல்லோரும் ஏத்தஎழில் அண்ணா மலைமன்னைச்
சொல்லெடுத்துப் பாடிய தூயோனே ! நின்னிடத்தில்
ஒல்லும் வகையால் உணர்வுபெற்ற மாணாக்கர்
வெல்லும் வகையால் வினைபுரிந்த ஆசான்மார்
பல்லோரும் போற்றப் பணிபுரிந்த முதறிஞ !
மாணிக்க மாமலையே ! மாட்சியுறும் ஆராய்ச்சி
பேணிப் பலபனுவல் பைந்தமிழ்தாய் ஏற்றிடவே
காணிக்கை வைத்த கவிஞர் தமிழ்க்களிறே !
ஆணிப்பொன் ஒத்த அருந்தமிழ்க்கு இன்னலெனில்
ஓடிப்போய் முன்நின்றே உண்மைக் குரல் கொடுக்கும்
பாடி மறவனே ! பால்போல் மனத்தோனே !
தன்மானம் ஓங்கத் தமிழ்ப் புலவன் வாழ்வதற்கு
முன்மானம் காத்த முதல்வனே ! நற்சிறாஅர்
தாய்தமிழே வாயிலாய்த் தாழ்விலாக் கல்வி பெற
வாய்மை இயக்கம் வளர்த்த தமிழ்மகனே !
உள்ளுதொறும் உள்ளுதொறும் ஓங்கும் உணர்வளிக்கும்
வள்ளுவரும் கம்பரும் வளர் தமிழ்க்காதலுமே
ஆய்வுநெறிக் (கு) ஆணியாய் ஆன்றோர்க் (கு) அருவிருந்தாய்
தேய்வறியாச் செல்வங்கள் செந்தமிழ்க்குத் தந்தவனே !
எண்மையனே ! திண்மையனே ! எண்ணம் சிறந்தவனே !
....
....
மீண்டுமொரு சங்கப் புலவனை மேதையினை
யாண்டு போய்க் காண்போம் இனி

நன்றி : "வ. சுப. மாணிக்கனாரின் வாழ்வும் பணியும்"
(மூதறிஞர், செம்மல், முனைவர் வ. சுப. மாணிக்கனார் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி (25—4—92) இக் கவிதை வெளியிடப் பெற்றுள்ளது.)




காரைக்குடியில் 22-2-92 அன்று நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் குழந்தை இலக்கியத்திற்கு முதல் பரிசு பெற்ற கவிஞர் திரு. செல்லகணபதிக்கு அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் திரு. கே. நாகப்பன் பொன்னாடை அணிவிக்கிறார். அருகே திரு ஏ. திருநாவுக்கரசு, கண்ணதாசன் நற்பணி மன்ற மாவட்டத் தலைவர் திரு. கே. ராஜேந்திரன்



காரைக்குடி கண்ணதாசன் விழாவில் திரு வி. என். சிதம்பரம் செட்டியாருக்கு துணைவேந்தர் முனைவர் திரு. கே. நாகப்பன் பொன்னாடை அணிவிக்க, திரு. வி. என். சிடி. க்கு 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' பட்டம் வழங்க ஆர்வமாகக் காத்திருக்கும் திரைப்பட இயக்குநர் திரு. எஸ்பி. முத்துராமனும் திரு. அரு. நாகப்பனும்.

சுப. அ. நடராசன் செட்டியார் இயற்கை எய்தினார்கள்



கள்ளக்குறிச்சி ஆற்காடு டெக்ஸ்டைல் மில்ஸ் லிட் - டின் நிறுவனத் தலைவரும் மதுரை நகரத்தார் சங்கத் தின் முன்னாள் தலைவரும் " நகரத்தார் குர " லின் வெளியீட்டாளருமான பனையப்பட்டி உயர்திரு. சுப. அ. நடராசன் செட்டியார் அவர்கள் தமது 78 ஆவது வயதில் 3-4-92 வெள்ளிக்கிழமை காலையில் பனையப்பட்டியில் மாரடைப் பால் இயற்கைஎய்தினார்கள் என்பதை மிகுந்த வருத்தத் துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களது இறுதிச் சடங்கு பனையப்பட்டியில் 4-4-92 சனிக்கிழமை மாலையில் நடைபெற்றது. நூற்றுக் கணக்கானோர் தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத் தினார்கள்.

நடராசன் செட்டியார் அவர்கள் அன்பிலும் பண்பிலும் சிறந் தவர்கள். பிறருக்கு உதவுவதையே தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருந்தவர்கள். நகரத்தார் சமூக நலனில் அக்கறை மிகக் கொண்டிருந்தவர்கள். நல்ல காரியங்களுக்கு மனமுவந்து உதவும் பண்பாளர்.

இவர்களது அன்புத் துணைவியார் திருமதி. ந. ஜானகி ஆச்சி அவர்கள் 8-2-91 அன்று இயற்கை எய்தினார்கள்.

நடராசன் செட்டியார் அவர்களுக்கு திரு. நடராஜ் அண்ணாமலை என்கிற புதல்வரும் டாக்டர் திருமதி ஆனந்தி அழகப்பன் திருமதி சுசீலா முத்துராமன் என்கிற இரு புதல்விகளும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

நடராசன் செட்டியார் அவர்களது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

துணை வேந்தரின் மணி விழா

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் திரு. கே. நாகப்பன் அவர்களுக்கும் அவர்களது துணைவியார் பேராசிரியை திருமதி மீனாட்சி நாகப்பன் அவர்களுக்கும் 9–3–92 அன்று பிள்ளையார்பட்டியில் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழாச் சிறப்பாக நடைபெற்றது.

மணி விழாவில் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ருத்சியா காந்தி, தவத்திரு குன்றக்குடி அடிகளார், கோவிலூர் சுவாமிகள், முனைவர் திருமதி ராதா தியாகராஜன், கருமுத்து திரு. தி. கண்ணன், துணை வேந்தர் முனைவர் திரு. முத்துக்குமரன் முன்னாள் துணை வேந்தர்கள் திரு ஆர். எம். சேது நாராயணன், திரு. எம். லெட்சுமணன், மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி தொழிலதிபர்கள் திருவாளர்கள் கருமுத்து சொக்கலிங்கம், ஆர். எம். அருணாசலம் வி. என். சிதம்பரம் செட்டியார், சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார், ராம. முருகப்ப செட்டியார் ராம. இராமநாதன் செட்டியார் மெ. நடராஜன் செட்டியார், உல. சுப. உலகப்பன், ப. லெட்சுமணன், மணிமொழியன், ஏ எல். திருநாவுக்கரசு, முத்துப் பழனியப்பன், மிதகுபட்டி சோம லெ, உமையாள் இராமநாதன், இராமநாதன், பேராசிரியர்கள் ச. மெய்யப்பன் அர. சிங்காரவடிவேலன் தியாக


ராசர் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். சொக்கலிங்கம், வானதி திருநாவுக்கரசு, காளியம்மை திருநாவுக்கரசு, கவிஞர்கள் செல்ல கணபதி, அரு. சோ., அரு. நாகப்பன், பெரி. சிவனடியான், உமையாள் முத்து, மா. முத்துராமன் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மணி விழாவில் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மணி விழாவை பனையபட்டி சுப. அ. குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் தங்கள் வீட்டு விழாவாகக் கருதி சிறப்பாக நடத்தி வைத்தனர்.


தேவகோட்டை-திருச்செந்தூர் பாத யாத்திரை

தேவகோட்டையிலிருந்து திருச்செந்தூருக்குப் பதினாறும் ஆண்டாக மெய்யன்பர்கள் பாத யாத்திரையாகப் புறப்பட்டுச் செல்கின்றனர். 10-4-92 வெள்ளி காலை 5-30 மணிக்கு தேவகோட்டை சிலம்பனி ஸ்ரீ சிதம்பர விநாயகர் கோவிலிலிருந்து புறப்பட்டு 17-4-92 வெள்ளி காலை 7 மணி அளவில் திருச்செந்தூர் ஸ்ரீ ஆனந்த விநாயகர் கோவிலுக்குச் சென்று மாலையில் திருச்செந்திலாண்டவனுக்கு காவடி பாற்குடங்கள் செலுத்த உள்ளனர்.

இதனை யொட்டி 9-4-92 வியாழன் மாலை 5 மணி அளவில் தேவகோட்டை நகரப் பள்ளிக் கூடத்தில் காவடி கட்டி அரோகராச் செய்து நகர் வலம் வருகின்றனர்.



கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற அழகப்பா பல்கலைக்கழக மாணவி செல்வி எஸ். சியாமளாவுக்கு காரைக்குடி கண்ணதாசன் விழாவில் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நினைவுப் பரிசினை மதுரை வானொலி நிலைய இயக்குநர் செல்வி எஸ். லீலா வழங்கும் காட்சி.



காரைக்குடி கண்ணதாசன் விழாவில் ஊனமுற்ற மாணவன் பழ. தியாகராஜனுக்கு ''தேவி'' ''மாலை முரசு'' சார்பில் மூன்று சக்கர வண்டியை இயக்குநர் திரு. எஸ் பி. முத்துராமன் பரிசாக வழங்கினர். அருகே திரு. வி. என். சிடி., முனைவர் திரு. கே. நாகப்பன், திரு. அரு. நாகப்பன் ஆகியோர்.

மணி விழாத் தம்பதியருக்குப் பாராட்டு விழா !

மணி விழாக் கண்ட அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் முனைவர் திரு. கே. நாகப்பன் – திருமதி மீனாட்சி நாகப்பனுக்கு காரைக்குடி சுழற் குழு சார்பில் மணி விழாவன்று (9–3–92) மாலை கம்பன் மணி மண்டபத்தில் பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

திரு. ஏ. திருநாவுக்கரசு வரவேற்புரை நல்க சுழற் குழுத் தலைவர் திரு. முத்து பழநியப்பன் தலைமையுரையாற்றினர்.

முனைவர் திரு. கே. நாகப்பனுக்கு திரு. எஸ்.வி.என். நாகப்பனும் திருமதி மீனாட்சி நாகப்பனுக்கு திருமதி மீனாட்சி அருணாசலமும் பொன்னாடை அணிவித்தனர்.

கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பில் திரு. கே. நாகப்பனுக்கு திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் பொன்னாடை அணிவித்தார்.

மணி விழாத் தம்பதியரைப் பாராட்டி வழக்கறிஞர் திரு. பி. எம். கதிரேசன், திரு. எம். ஏ. எம். எஸ் பி. காசிச் செட்டியார், கவிஞர் திரு. செல்லகணபதி, இலக்கியச் சிந்தனை திரு. ப. லெட்சுமணன், திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் ஆகியோர் பேசினர்கள்.

சுழற்குழு சார்பாக திரு. கே.

நாகப்பனுக்கு தொழிலதிபர் திரு. ஆர்எம். அருணசலமும் திருமதி மீனுட்சி நாகப்பனுக்கு திருமதி நாச்சம்மை கருப்பன் செட்டியும் நினைவுப் பரிசுகளை வழங்கினர்.

பாராட்டுரை நல்கிய பேச்சாளர்களுக்கும் இவ்விழாவில் நினைவுப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

விஸ்வேஸ்வரர் அறக் கட்டளையின் சார்பாக முனைவர் திரு. நாகப்பனுக்கு திரு. ப. லெட்சுமணன் நினைவுப் பரிசு ஒன்றை வழங்கினுர்.

முனைவர் திரு. கே. நாகப்பன் ஏற்புரை வழங்க சுழற் குழுச் செயலாளர் திரு. வயி. கருப்பன் செட்டி நன்றி கூறினர்.

இவ்விழாவில் வாய் பேசாத காது கேளாத பள்ளிக் குழந்தைகளுக்கு முனைவர் திரு. கே. நாகப்பன் சீருடைகளை வழங்கினர்.

முருகன் கோவிலில் அன்னதானம்

மதுரை நேதாஜி சாலையில் உள்ள பாலமுருகன் கோவிலில் 18–3–92 பங்குனி உத்தரத்தன்று 'மீனுட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் தலைமையில் கீழப்பெரும்பள்ளம் திரு. ஆர். கே. அரங்கநாதம் பிள்ளை, மதுரை நக. இளைஞர் சங்கத் தலைவர் திரு. ஆர். சொக்கலிங்கம் முன்னிலையில் சுமார் 500 பேருக்கு தயிர் சாதத்தையும் 500 பேருக்கு விசிறியையும் திரு ஆர். இரவிச்சந்திரன், திரு. டி. ஜெயக்குமார், திரு. எம்.எஸ். ஸ்ரீதரன் ஆகியோர் உபயமாக வழங்கினுர்கள்.

விரையாச்சிலையில் குட நீராட்டு

விரையாச்சிலை அருள்மிகு ஸ்ரீ கலியுக மெய்ய அய்யனுர் ஸ்ரீ காவேரி அம்மன் மற்றும் பரிவார தேவதைகளுக்கு 20–4–92 திங்கட்கிழமை காலை 6-10 மணிக்கு மேல் 7–15 மணிக்குள் திருப்பரங்குன்றம் பாம்பன் சுவாமிகள் நகர் தவத்திரு இராமச்சந்திர சுவாமிகள் முன்னிலையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

நகரத்தார் திருமண முறைகள்

தொகுப்பு: A. K. கிருஷ்ணன் B. Sc.

வேவு

மணமகள் வாழப் புகுந்த இடத்தில் வளமுடன் வாழவும் தன் தாய் வீட்டில் இருந்து பொருட்கள் வரவில்லையே என்ற குறையினைப் போக்கவும் அனைத்து உணவுப் பொருட்களையும் தாங்களாகவே விரும்பி தலைச் சுமையாகவே கொண்டு வந்து கொடுப்பதுதான் வேவு.

கல்யாண வேவு மாம வேவு (தலைப் பிள்ளையாக இருந்தால் எடுக்கப்படும்) ஆடி வேவு, கார்த்திகை வேவு, முதல் வருட வேவு, விளையாட்டுபெட்டி வேவு என்று வேவுகள்பல திறத்ததாகும்.

தலைச்சீலையில் முடிதல்

மணமகளின் தந்தை தன் மகளை மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் போது வழிச் செலவுகளுக்கு கொடுக்கின்ற முதல் பணப் பரிசு தான் ''தலைச் சீலையில் முடிதல்'' என்பதாகும் ''தலைச் செலவிற்காக முடிதல்'' என்பதிலிருந்து இது மருவி இருக்கலாம்.

மணமகளின் தந்தை ஒரு தொகையை மணமகனின் தலையில் வைப்பார். அதனை மாமன் காரர் எடுத்து மணமகன் தந்தையிடம் கொடுத்து விடுவார். பின்னர் இந்தத் தொகை மணமகளுக்குக் கொடுக்கின்ற சீதனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளப் படும்.

மாமப்பட்டு

ஒரு பாத்திரத்தில் மஞ்சள், அரிசி, தேங்காய் போன்றவைகளைப் போட்டு பட்டுத் துணியால் மூடி மணமக்களின் மாமன் முறையினர் பிடித்திருப்பார்கள்.

மணமக்கள் அதை ஒருவருக்கொருவர் மூன்று முறை மாற்றிக் கொள்வர். இந்தத் திருமணத்தில் மணமகளின் தந்தை மணமகனுக்கு மோதிரம் அணிவிப்பார்.

மொய் எழுதுதல்

'மொய்' என்றால் நெருங்கிய உறவினர்கள் என்று பொருள்.

மணவறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும்பொழுதே மணமக்களின் பங்காளிகள் சிலர் தனித்தனியே அமர்ந்து கொண்டு ஒரு முக்காலியின் மீது பாத்திரம் வைத்து அதில் பாலூற்றி வெற்றிலையைக் கிள்ளிப் போடுவார்கள்.

பிறகு சங்கு ஊதி முதன்



சுழற் குழுவின் மாவட்ட ஆளுநர் திரு. ஏ. வி. ஆர் எம். வி. சங்கரநாராயணன் 17–3–92 அன்று காரைக்குடிக்கு வருகை தந்த போது சுழற் குழு சார்பாக பல சமுதாயப் பணிகள் மேற்கொள்ளப் பெற்றன. அப்போது ஆளுநருக்கு முன்னாள் சுழற் குழுத் தலைவரும் தொழிலதிபருமான திரு. ஆர் எம். அருணாசலம் நினைவுப் பரிசை வழங்கினார். அருகே சுழற் குழுத் தலைவர் திரு. முத்து பழநியப்பனும் செயலாளர் திரு. வயி. கருப்பன் செட்டியும் உள்ளனர்.

முதலில் மணமக்களின் தந்தைக்கு தந்தையின் பெயரை எழுதி மொய்ப் பணம் பெறுவார்கள். பிறகு உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லோரும் மொய் எழுதுவார்கள்.

மறுபடியும் சங்கு ஊதி மாமன்காரர்களிடம் 'மாமப் பணம்' பெறுவார்கள். பின்னர் மொய் எழுதிய பணத்தைத் தட்டில் வைத்து மஞ்சள் தடவி தாம்பாளத்தில் வெற்றிலை பாக்குடன் வைத்து மணமகனின் கையில் கொடுத்து, பெரியவர்களிடம் கொடுத்து ஆசீர்வாதம் பெறச் செய்ய வேண்டும்.

கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்

மணமக்கள் நடுவாசலில் வந்து நின்று கொண்டு பெற்றோர், உற்றார் உறவினர் மற்றும் சான்றோர்களை விழுந்து வணங்கி வாழ்த்துப் பெறுவார்கள்

சீராட்டுக் கொடுத்தல்

மகளுக்கு தகப்பனாரும், அவருடைய சகோதரர்களும் தருகின்ற பணம்தான் சீராட்டு எனப் படும்.

மஞ்சள் நீராடுதல்

நகரச் சிவன் கோவில் வயிராவி ஒருவர் மணமகனுக்கு எண்ணெய் தேய்த்து விடுவார். மணமகனின் உறவினப் பெண் ஒருவர் மணமகளுக்கு எண்ணெய் தேய்த்து விடுவார். பிறகு மணமக்கள் நீராடி வந்ததும், மணமகனுக்கு மாமனார் புதுத் துணி

கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வார். இது போலவே மண மகளுக்கு மாமியார் புதுத்துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வார்.

காப்புக் கழற்றி கால் மோதிரம் அணிதல்

மணமகனின் தாயார் மண மகளுக்குத் தன் கையில் அணிந் திருக்கும் காப்பை கழற்றி அணி வித்து கால் விரல்களில் வெள்ளி மோதிரம் அணிவார்கள். இதனை 'மிஞ்சி' என்றும் அழைப்பதுண்டு.

மாமியார் தன் மருமகளுக்கு நல்ல நாளில் தன் அணிகலன் களைக் கொடுத்து குடும்பப் பொறுப்பைக் கொடுக்கிறார் என்று பொருள்.

பகவத்யானத்தின் போது மணமக்கள் கைகளில் கட்டிய மஞ்சள் காப்பை அவிழ்த்து விடு வார்கள்.

நாணாளைச் சடங்கு

திருமணம் முடிந்து புகுந்த வீட்டுக்கு வருகின்ற மணமகள் எல்லாப் பேறுகளும் பெற்று மகிழ்வோடு வாழ வேண்டும் என மாமியார் வாழ்த்துவதே இந்தச் சடங்கின் உட்பொருளாகும்.

பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்

வெள்ளியினால் செய்த ஒரு குழவியை ஒரு சிறு பட்டுத்துணி யில் வைத்து மணமகள் ''தான் மகப்பேறு பெற்று விட்டதாகவும் அதனை வாழ்த்த வேண்டும்'' என்றும் தாய், தந்தையர் மற் றும் பெரியவர்கள் கால்களில் விழுந்து வணங்கி ஆசி பெறுவ தாகும்.

பெண் சொல்லிக் கொள்ளுதல் - குடி அழைப்பு

திருமணத்தன்று மாலையில் ஒரு நல்ல நாழிகையில் மணமகள் நடுவீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பத்தியில் விரித்திருக்கும் பாய் ஒன்றில் கிழக்கு முகமாக கையில் வெற்றிலை பாக்குடன் வந்து நிற்க வேண்டும்.

மணமகளின் பெற்றோர், சுற்றத்தார் ஒவ்வொருவராக வந்து அந்தப் பாயின் மீது நிற்க அவர்களிடம் வெற்றிலை பாக் கைக் கொடுத்து அவர்களின் காலில் விழுந்து வணங்கிச் 'சென்று வருகிறேன்' என்று சொல்லி வாங்கிக் கொள்ள வேண்டும்.

இதன் பிறகு மணமக்கள் இருவரும் நடுப்பத்தியில் உள்ள கோலத்தின் அருகே வந்து நிற் பார்கள்.

மணமகளுக்கு ஆயான் வந்து ஸ்லேட் விளக்கு வைத்து அழகு ஆலாத்தி எடுத்து மணமக்கள் இருவருக்கும் திருநீறு இட்டு கட்டுச் சோறுடன் வழி அனுப்பி வைப்பார்கள்.

பால், பழம் சாப்பிட ஆயா விடு சென்று வருதல்.

உண்டியல்

மணமகளின் தந்தை தன் மகளுக்கு தருகின்ற சீதனப் பணத்திற்கு உண்டியல் எழுதி உடனே செல் வைத்து பணத் தைக் கொடுப்பதாகும். உண்டி

யல் என்பது பணம் கொடுக்கல் வாங்கலுக்காக ஏற்பட்ட அத் தாட்சி ஆகும்.

முற்றும்

''நகரத்தார் திருமண நடை முறை'' என்ற, தான் எழுதிய நூலிலிருந்து, இக்கட்டுரை வரிக்கு வரி எடுத்தாளப் பெற்றிருப்பதாக திரு. பழ. அண்ணாமலை அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே இக் கட்டுரைகளுக்கு மூலகர்த்தாவான அவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

துலாவூர் ஆதீனத்தில் சைவ சித்தாந்த வகுப்பு

துலாவூர் ஆதீனத்தில் 22-4-92 முதல் 28-4-92 முடிய ஒரு வார காலம் காலையிலும் மாலையிலும் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் சைவ சித்தாந்த வகுப்பு நடத்துகிறார்கள். 22-4-92 காலை 10 மணிக்கு அதனை லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள். கோவிலூர் பாதரக்குடி துலாவூர் ஆதீன கர்த்தர்கள் அருளாசி வழங்குகிறார்கள். தினம் காலை 10 மணி முதல் 12-30 மணி வரையும், மாலையில் 3 மணி முதல் 5 மணி வரையும் சைவ வகுப்பு - கலந்துரையாடல் நிகழும். உணவு - தங்கும் வசதி செய்யப்படுகிறது. கலந்துகொள்ள விரும்பும் ஆண் பெண் அனைவரும் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் 123 முத்துப் பட்டணம் 3ஆம் வீதி, காரைக் குடி-623 001 என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளும்படி திரு. சோம. நாராயணன் செட்டியார் அறிவித்துள்ளார்கள்.

மணி விழா

தேவகோட்டை சத்திரத்தார் வீட்டைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. லெட்சுமணன் செட்டியார்-லெட்சுமி ஆச்சியின் மணி விழா 14-3-92 அன்று சிறப்பாக நிகழ்ந்தது. அவ்வமயம் நிகழ்ந்த கவியரங்கில் டாக்டர் திரு. அர. சிங்காரவடிவேலன் தலைமையில் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன், கு. செ இராமசாமி, டாக்டர் சபா. அருணாசலம், சோம. இராமலிங்கம், இளங்கோவன் ஆகியோர் கவிபாடி வாழ்த்தினர்.

குட நீராட்டு விழா

ஆ. முத்துப்பட்டணம் ஸ்ரீ லோகநாயகி அம்மன் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 8-5-92 (சித்திரை மீ" 26வ) வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கு மேல் 8-12 மணிக்குள் நடைபெற உள்ளது.

5-5-92 செவ்வாய் இரவு யாகசாலைப் பூஜை தொடங்குகிறது.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத்தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி.என்.சிதம்பரம்.

"நகரத்தார் குரல்" உறுப்பினர்களுக்கு...

"நகரத்தார் குரல்" ஒவ்வொரு ஆங்கில மாதமும் 6 அல்லது 7 ஆம் தேதி அஞ்சலில் அனுப்பி வைக்கப் பெறு கிறது. அப்போது அனுப்பப் பெறும் இதழ் ஒன்றுக்கு ரூ. 0 15 சலுகைக் கட்டணம் ஆகும். அதற்குப் பிறகு திறந்த அஞ்சல் மூலம் அனுப்பப் பெறும் ஒவ்வொரு இதழுக்கும் ரூ. 1-00 கட்டணம் ஆகும். எனவே இயன்றவரை ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் தேதிக்குள் சந்தாத் தொகை எமக்குக் கிடைக் கக கூடியதாக அனுப்பி உதவுங்கள்.

அன்புகூர்ந்து சந்தாத் தொகைக்கு வெளியூர் வங்கிக் காசோலைகளை அனுப்பாதீர்கள். வங்கி டிராப்ட், மணியார்டா அல்லது ரொக்கமாகச் செலுத்துங்கள். (காசோலைகள் "நகரத் தார் குரல்" என்ற பெயரில் இருத்தல் வேண்டும்)


சந்தா முடிந்தபின் புதிய ஆண்டுக்குத் தொகை செலுத் தும்போது அல்லது அனுப்பும்போது தங்களுக்கு எந்த மாதம் முதல், இதழ் வேண்டும் அல்லது ஏற்கனவே தங்களுக்கு வழங் கப் பெற்ற நிரந்தர இரசீது எண் (அதுவே அந்த ஆண்டின் உறுப்பினர் எண்) ஆகியவற்றை மறவாமல் குறிப்பிடுங்கள்.

பலர் மணியார்டர் அனுப்பும்போது கூப்பனில் அனுப்பு பவர் முகவரி இல்லாமலும் எந்த மாதம் முதல் இதழ் வேண்டும் அல்லது இரசீது எண்ணைக் குறிப்பிடாமலும் அனுப்பிப் பொறு- மையைச் சோதிககின்றனர் (தனிப்பட்டவர் பெயரில் மணியார் டர் அனுப்ப வேண்டாம்)

ஒவ்வொரு ஆண்டும் சந்தாவைப் புதுப்பிப்பது சிரமம் எனக் கருதுபவர்களும் வசதி உள்ளவர்களும் டெபாசிட் சந்தா வாக ரூ. 300/-ஐச்செலுத்தி எங்களுக்கு உதவ வேண்டுகிறோம்.

— நிர்வாகி

"நகரத்தார் குரல்"



காரைக்குடியில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவில் திரு. வி. என். சிதம்பரம் செட்டியாருக்கு 'கண்ணதாசன் புகழ்க் காவலர்' என்ற பட்டத்தினை திரைப்பட இயக்குநர் திரு. எஸ் பி. முத்துராமன் வழங்கும் இனிய காட்சி. அருகே (இ-வ) திருவாளர்கள் கே. இராஜேந்திரன், அரு. நாகப்பன், பி. எஸ். ஆர் எம். இராமசாமி, முனைவர் கே. நாகப்பன், ஏ எல். திருநாவுக்கரசு, செல்லகணபதி.

Regd. No. TN/MA/(C)/106 NAGARATHAR KURAL